**சமுர்த்தி வீடமைப்பு அபிவிருத்தி லொத்தர் நிதியம் - 2017**

---

சமுர்த்தி வீடமைப்பு அபிவிருத்தி லொத்தர் நிதியத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதநிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 இன் 01 ஆம் இலக்க திவிநெகும அதிகாரச் சட்டத்தின் 45 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மேற்படி நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

---

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

-----------------------------

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

-----------------------------------------------------

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்களானவை திவிநெகும வீடமைப்பு அபிவிருத்தி லொத்தர் நிதியத்தின் 2017 திசெம்பர் 31 இல் இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

---------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் பிரகாரம் நடைமுறையல்லாச் சொத்துக்களின் பயனுள்ள ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாத காரணத்தால் முழுமையாகப் பெறுமானத் தேய்விடப்பட்டுள்ள கிரயம் ரூபா 2,369,568 ஆன கணனிப்பாகங்களில் 2002 மற்றும் 2005 ஆம் வருடங்களில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 1,533,980 பெறுமதியான பயன்படுத்தப்படாத கணனிகளை அகற்றுவதற்கும் 2012 ஆம் வருடத்தில் கொள்வனவு செய்யப்பட்ட பயன்படுத்தப்பட்டு வருகின்ற ரூபா 835,588 பெறுமதியான கணனிகள் தொடர்பாக கொண்டு செல்லும் பெறுமதிகள் தீர்மானிக்கப்பட்டுக் கணக்கிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) முன்னைய வருடங்களில் செலுத்தப்படாத பரிசுத் தொகை ரூபா 7,150,000 மீளாய்வாண்டில் திரும்பப் பெறப்பட்டிருந்ததுடன், அத்தொகை நிதியப் பாய்ச்சல் கூற்றில் சீட்டிழுப்பு பங்களிப்புத் தொகை பெறுவனவுகளாக குறிப்பிடப்படாது மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் பணம் மற்றும் பணத்திற்குச் சமனானவையாகக் குறிப்பிடப்பட்டிருந்தது.

### 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்

-----------------------------------------------------------------------------------------------------------------------------------------

2006 திசெம்பர் 22 ஆந் திகதிய பீஎப்/423 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை மற்றும் 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை மூலம் வெளியிடப்பட்ட நிதிப்பிரமாணம் 876(3) பிரகாரம் நியதிச் சட்டமல்லாத நிதியமொன்று தொடர்ந்தும் பேணப்பட்டு வருவதற்கு நியாயமான காரணங்கள் இருப்பின் அவ்வாறான நிதியங்கள் பாராளுமன்றச் சட்டத்தின் மூலம் சட்டபூர்வமாக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமெனக் குறிப்பிடப்பட்ட போதிலும், நிதியத்தை சட்டரீதியாக்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்படாது முகாமைத்தவச் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட பிரமாண விதிகளின் பிரகாரம் மீளாய்வாண்டு வரையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## 3. நிதிசார் மீளாய்வு

------------------------------

### 3.1 நிதிசார் விளைவுகள்

-----------------------------------

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதியத்தின் நிதி விளைவு ரூபா 142,111,051 ஆன மிகையாக இருந்ததுடன் , அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகையானது ரூபா 447,187,633 ஆனதுடன் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் நிதி விளைவு ரூபா 305,076,582 ஆன பின்னடைவொன்றைக் காட்டுகின்றது. மீளாய்வாண்டில் பரிசு பெற்ற

குடும்பங்கள் 2400 இலிருந்து 3972 வரை அதிகரித்தமையால் பரிசுக்கான செலவுகள் ரூபா 312,300,000 ஆல் அதிகரித்தமை பிரதான காரணமாக இருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2016 மற்றும் 2017 ஆம் வருடங்களில் வெற்றி பெற்ற சீட்டிழுப்பு வெற்றியாளர்களில் முறையே 183 பயனாளிகள் மற்றும் 126 பேருக்கு உரிய தொகை முறையே ரூபா 36,600,000 மற்றும் ரூபா 25,200,000 ஆனது பயனாளிகள் இறந்தமை, பரிசு பெற்றவர் மானியங்களைப் பெறுபவராக இல்லாதிருந்தமை, வெளிநாட்டிற்குச் சென்றமை, விபரங்கள் கண்டுபிடிக்க முடியாதிருந்தமை, ஒரு முறை வெற்றி பெற்ற பயனாளிகள் மீண்டும் சீட்டிழுப்பிற்காக குறிப்பிட்ட காலப்பகுதிக்கு இடை நிறுத்தப்படும் முறையொன்றாக குறிப்பிட்ட காலப்பகுதிக்கு தரவு அமைப்பிலிருந்து பயனாளிகளின் பெயர்கள் நீக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படாமை போன்ற நானாவித காரணங்களின் அடிப்படையில் மாவட்ட அலுவலகங்களின் பரிசுத் தொகை மீண்டும் அனுப்பபட்டிருந்தது. இதன் பிரகாரம் கணிசமான அளவு சமுர்த்தி பெறுநர்கள் வெற்றி பெறும் வாய்ப்புக்களை இழந்துள்ளபடியால் நிதியத்தின் நோக்கம் மற்றும் குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்கு முடியாதிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டில் சமுர்த்தி பெறுநர்களின் சராசரி எண்ணிக்கை 16,773,010 ஆக இருந்த போதிலும், அச் சமுர்த்தி பெறுநர்களில் வருடத்தில் பரிசுக்குத் தகுதி பெற்ற பரிசு வென்றவர்களின் எண்ணிக்கை 3846 அதாவது 0.022 சதவீதம் ஆகும். இப் பரிசு பெற்றவர்களுக்காக மீளாய்வாண்டில் வழங்கப்பட்டிருந்த பங்களிப்புத் தொகையில் 91 சதவீதமொன்று செலுத்தப்பட்டிருந்ததுடன் அதன் பெறுமதி ரூபா 769,300,000 ஆகும். இக் காரணத்தினால் அனைத்து பயனாளிகளுக்கும் வீடு என்ற நிதியத்தின் தொலை நோக்கு மற்றும் நோக்கங்களை அடைந்து கொள்வதற்குத் தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) சமுர்த்தி வீடமைப்பு அபிவிருத்தி லொத்தர் நிதியத்தின் பிரமாணம் இலக்கம் 17 இன் பிரகாரம் அனைத்து சீட்டிழுப்புக்களும் நடைபெறுவதற்கு முன்னர் அந்த மாதத்தில் சமுர்த்தி மானியத்திலிருந்து விலகிய மற்றும் புதிய பனளாளிகளின் விபரங்கள் கணனி தரவு அமைப்பிற்கு உட்படுத்தப்பட்டு நாளது வரையாக்கப்பட வேண்டியுள்ள போதிலும், அதன் பிரகாரமத் நடவடிக்கை எடுக்கப்படாமையால் 2012 ஆம் வருடத்திலிருந்து 2017 ஆம் வருடம் வரையிலான 06 வருடங்களில் பரிசு பெற்ற 574 பயனாளிகளுக்கு உரிய ரூபா 101,550,000 ஆன பரிசுத் தொகையொன்று வழங்குவதற்கு முடியாதிருந்தது.

(ஈ) சமுர்த்தி வீடமைப்பு அபிவிருத்தி லொத்தர் நிதியத்தின் பிரமாணம் இலக்கம் 8 இன் பிரகாரம் வெற்றி பெறும் பயனாளிகளின் பொருளாதார நிலைமையை உயர்த்துவதற்கு பொருத்தமான திட்டங்களில் கவனஞ் செலுத்துதல் நிதியத்தின் குறிக்கோளாக இருந்த போதிலும், இது தொடர்பாக எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.றி பெறும் பயனாளிகளின் பொருளாதார நிலைமையை உயர்த்துவதற்கு பொருத்தமான திட்டங்களில் கவனஞ் செலுத்துதல் நிதியத்தின் குறிக்கோளாக இருந்த போதிலும், இது தொடர்பாக எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

## 4.2 நோக்கங்களுக்கு முரணாக நிதியம் பயன்படுத்தப்படாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் விசேட செயற்திட்டமொன்றை செயற்படுத்தப்படுகின்ற சமுர்த்தி மாதிரிக் கிராமத்தின் கீழ் கிராமத்தில் வசிக்கும் குறைந்த வருமானம் பெறும் ஏழைக் குடும்பங்களுக்காக செயற்படுத்தப்படுகின்ற மாதிரிக் கிராம வீடமைப்புத் திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட குடும்பம் ஒன்றுக்காக வீடொன்றை நிர்மாணித்துக் கொடுக்குமாறு சமுர்த்திப் பணிப்பாளர் நாயகத்தின் கோரிக்கைக்கு, 2016/DL/10/01 ஆம் இலக்க நம்பிக்கைப் பொறுப்புச் சபை பத்திரம் மூலம் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 25 மாவட்டங்களில் 40 மாதிரிக் கிராமங்கள் செயற்படுத்தப்பட்டிருந்ததுடன் ஒரு கிராமத்திற்கு ஒரு வீடு வீதம் 40 வீடுகள் நிர்மாணிப்பதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. அச் செயற்திட்டத்திற்காக சமுர்த்தி பெறுநர்களின் மாதாந்த பங்களிப்புடன் நிறுவப்பட்டிருந்த இந் நிதியத்தில் சமுர்த்தி பெறுநர்கள் அல்லாத 6 குடும்பங்களுக்கு வீட்டு நிர்மாணத்திற்காக ஒருவருக்கு ரூபா 200,000 வீதம் மொத்தம் ரூபா 1,200,000 செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) விசேட கவனம் கோரப்பட வேண்டிய குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கான வீடுகளை நிர்மாணிப்பதற்காக நிதியத்தின் பிரமாணக் கோவைக்கு முரணாக மீளாய்வாண்டில் சீட்டிழுப்புக்கள் இல்லாமல் 19 நபர்களுக்கு ரூபா 2,850,000 ஆனது செலவிடப்பட்டிருந்தது.

(இ) புத்தளம் மாவட்டத்தின் ஆராய்ச்சிக் கட்டுவ பிரதேச செயலகப் பிரிவில் உள்ள நகுல் எலிய கிராமத்திற்கு குறைந்த வருமானம் பெறும் 26 மீனவக் குடும்பங்களுக்காக ''சமுர்த்தி வாசனா நிவாச'' கிராமத்தை நிர்மாணிப்பதற்கு நிதியத்தின் பிரமாணக் கோவைக்கு முரணாக ஒரு வீட்டிற்கு ரூபா 500,000 வீதம் அதிகபட்சத்திற்குட்பட்டு ரூபா 13,000,000 ஆனது செலுத்தப்பட்டிருந்தது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2006 திசெம்பர் 22 ஆந் திகதிய பீஎவ்/423 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை மற்றும் 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 15 ஆம் பந்தியில் உள்ளடக்கப்பட்ட நிதிப்பிரமாணம் 877(2)(ஈ) பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 2 மாதங்களுக்குள் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமாயினும், மீளாய்வாண்டின் திருத்தப்பட்ட நிதிக்கூற்றுக்கள் 2021 நவம்பர் 08 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 5.2 கணக்காய்வுக் குழு

திணைக்களத்தின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவினால் நிதியத்திற்கான கணக்காய்வு அவதானிப்புக்கள் கலந்துரையாடப்பட்டிருக்கவில்லை.

### 5.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

2006 திசெம்பர் 22 ஆந் திகதிய பீஎவ்/423 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 4.1 பந்தியின் பிரகாரம் மற்றும் 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 15 ஆம் பந்தியில் உள்ளடக்கப்பட்ட நிதிப்பிரமாணம் 877(1) பிரகாரம் நிதியத்தின் அலுவல்கள் சம்பந்தமாக வரவு செலவுத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

--------------------------------------------------------------------

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டிலான குறைபாடுகள் தொடர்பாக காலத்திற்குக் காலம் தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்ததடன் நிதியம் சட்டரீதியாக்கப்பட்டு உள்ளகக் கட்டுப்பாடு முறைமையொன்று நிறுவப்பட்டு நடவடிக்கைகள் முறையாகவும் செயற்திறனாகவும் பேணிச் செல்வதற்கான விசேட கவனம் கோரப்படல் வேண்டும்.